எழுதிக் கொடுத்திருக்கிறார் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த ஊராட்சி ஒன்றியத்தின்கீழே ஏற்கெனவே செயல்பட்டு வந்த* dispensaries *எல்லாவற்றையுமே ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு முடிவெடுத்து, அதிலே சாத்தியக்கூறுகள் இருந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய மருந்தகங்களை, ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்த ஆணை பிறப்பிக்கப்பட்டு, திறக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற ஊராட்சி ஒன்றியத்தினுடைய அந்த மருந்தகத்தையும் அடுத்த சுற்றிலே ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. அறிக்கை அளித்தல்

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள்மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின்முன் வைக்கப்பட்டிருக்கின்ற உரிமைக் குழுவின் அறிக்கையை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. இன்னும் உரிமைக் குழுவின் அறிக்கையை வைக்கவில்லை. அதற்குள் நீங்கள் எழுந்து*

2016 ஜனவரி 22] [பேரவைத் தலைவர்]

நிற்காதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இன்னும் நான் சொல்லவே இல்லை. வைக்கவே இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, மேசையில் வைத்தாகிவிட்டது. அவை உரிமைக் குழுவின் தலைவர் சொல்லட்டும், உட்காருங்கள். என்ன? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: எந்த paper ஆக இருந்தாலும் ஒருமுறை இந்த அவையில் வைக்கப்பட்டால் அது இந்த House-னுடைய property ஆகிவிடும். எனவே, இங்கே வைக்கப்பட்டது House-னுடைய property. இதைப் படிக்க, இதுகுறித்து கேள்வி கேட்க. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை வைத்ததற்குப் பிறகு கேட்கலாமே என்று தான் சொன்னேன். (குறுக்கீடுகள்) அதாவது, அறிக்கையை அவர் வைத்ததற்குப் பிறகு நீங்கள் சொல்லலாமே என்றுதான் நான் சொல்ல வருகிறேன்.

திரு. துரைமுருகன்: நீங்கள் அவர் சொன்னதற்குப் பிறகு வைத்திருக்க வேண்டும். ஆனால், வைத்துவிட்டீர்கள். Once it is already placed in the House, we have the right to ask. எங்கள் தலைவர்மீது வேண்டுமென்றே ஒரு குற்றச்சாட்டை உருவாக்கிக்கொண்டு, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், குழுவின் அறிக்கையை வைக்கட்டும். குழுவின் அறிக்கை அளித்தல். அவை உரிமைக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், அவை உரிமைக் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள்மீது எழுப்பப்பெற்ற உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவை உரிமைக் குழு அறிக்கையின் நகல்களைக் கிழித்தெறிந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் சரியில்லை. (குறுக்கீடுகள்) இல்லை. அவர் அறிக்கையை அவையில் வைத்ததற்குப் பின்னாலே பேசுவதற்கு உங்களுக்கு அனுமதி

தருகிறேன் என்றுதான் சொன்னேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அவர் வைப்பதற்கு முன்னதாகவே பேச வாய்ப்புக் கேட்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டனர்.)

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து அரசினர் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இதெல்லாம் முறையில்லை. (குறுக்கீடுகள்) ஒரு அறிக்கையை இதுமாதிரி செய்வது முறையற்ற செயல். (குறுக்கீடுகள்) இல்லை, இதெல்லாம் முறையற்ற செயல். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 13 (2)-ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற அவை உரிமைக் குழுவின் அறிக்கையை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (அ)-ன்கீழ் (குறுக்கீடுகள்) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடுகள்)